தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

************************

ஸ்ரீ குரு பாதுகா ஸ்தோத்திரம்

**********

1)

மாய உலகென்னும் கடல் கரைசேர்க்கும் ஓடம்...
தூய குருபக்தி ஒளி காட்டும் தீபம்..
தீய பற்றென்னும் பந்தத்தை அறுக்கும்
குருபாதுகைக்கு என் வந்தனங்கள் !

2)

பெரும் ஞானக் கடலாம் ! முழுதான நிலவாம் !
துர்பாக்ய தீயை அணைக்கின்ற நீராம் !
தனை நாடி வருவோரின் இன்னல்கள் நீக்கும்...
குருபாதுகைக்கு என் வந்தனங்கள் !

3)

ஏழ்மை நிலை மாற்றி செல்வங்கள் சேர்க்கும் !
ஊமையைக் கூட பேச்சாளன் ஆக்கும் !
தாழ்மையாய் பணிவோர்க்கு நலமெல்லாம் கூட்டும்
குருபாதுகைக்கு என் வந்தனங்கள் !

4)

குருமாரின் மலர்பாதம் அதைநோக்கி ஈர்க்கும் !
விருப்போடு தொழுவோரின் விருப்பங்கள் தீர்க்கும் !
வீணான ஆசைகள் அவையாவும் நீக்கும் !
குருபாதுகைக்கு என் வந்தனங்கள் !

PSDPrasad Music

தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

*************************

ஸ்ரீ குரு பாதுகா ஸ்தோத்திரம்

**********

௫)

மகராஜன் மகுடத்தின் மணிக்கல்லாய் மின்னும் !
சுக ராஜ யோக நலம்யாவும் சேர்க்கும் !
கொடும் முதலைக் கூட்டத்தில் தேவதை ஆகும் !
குருபாதுகைக்கு என் வந்தனங்கள் !

௬)

பெரும் பாவ இருளை முடிவாக்கும் சூர்யன் !
கொடும் நாக துன்பம், அதை நீக்கும் கருடன் !
அறியாமைக் கடல்தன்னை எரிக்கின்ற தீயாம் !
குருபாதுகைக்கு என் வந்தனங்கள் !

௭)

"ஷாமா"முதல் ஆன குணம் ஆறும் கொடுக்கும்!
ஸ்ரீமானாம் திருமாலை நெஞ்சோடு நிறுத்தும் !
மாணாக்கன் எல்லோர்க்கும் ஆனந்தம் சேர்க்கும் !
குருபாதுகைக்கு என் வந்தனங்கள் !

௮)

அருஞ்சேவை செய்கின்ற சிஷ்யர்க்கு எல்லாம்
அவர்தேவை தானாக அறிந்தருளிச் செய்யும் !
கேட்பார்க்கு வீடென்னும் பெரும்பேறு சேர்க்கும்...
குருபாதுகைக்கு என் வந்தனங்கள் !

பேராசை பாம்பிற்கு, கருடன்போல் ஆகும் !
ஊராசை பற்றெல்லாம் தூளாக ஆக்கும் !
புதுஞான ஒளிகாட்டி நல்முக்தி சேர்க்கும்
குருபாதுகைக்கு என் வந்தனங்கள் !

PSDPrasad Music